1973 நவம்பர் 20]

சரியல்ல. எல்லா நகரங்களிலுமே இம்மாதிரி தனிப் பேருந்துகள் விடுவது என்பது ஆங்காங்கே இருக்கின்ற நெருக்கடி நிலைமையைப் பொறுத்தது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரை நகரில் நெரிசல் நேரங்களில் பெண்களுக் கென்று தனி பேருந்துகள் விடப்படுகின்றன என்று சொன்னார்கள். அதே நேரத்தில் சில கல்லூரிகளுக்குப் போகக்கூடிய மாணவர்களுக்கு பஸ் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் கொஞ்சம் அதிகமாக பஸ்களை விடுவதற்கு பி.ஆர்.சி.-க்கு அரசாங்கம் ஆலோசனை வழங்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெரிசலைப் பொறுத்து பஸ் வசதிகள் அதிகமாக்கப்படும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரை நகரில் இருந்து திருப்பரங்குன்றத்திற்கு—முருகன் கோவிலுக்குச் செல்லும் பாதையில் நெரிசல் அதிகமாக இருக்கிறது. பயணிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் கோவிலுக்குச் சென்றுவர பெண்களுக்குத் தனி பஸ் வசதி செய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெரிசலைப் பொறுத்து போதுமான பஸ் வசதிகள் செய்யப்படும் என்று ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

சேலம் மாரியம்மன் கோயில் கோபுரம்.

*246 **வினா—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாரியம்மன் கோயிலில் கோபுரம் கட்டுவதற்கென அண்மையில் அனுமதி ஏதேனும் கோரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

[1973 நவம்பர் 20

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆம் என்று பதில் சொல்லி விட்டார்கள். எப்போது அனுமதி கோரப்பட்டது? எப்போது வேலை முடிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த வேலை துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிவடையலாம்.

திருக்கண்மாலீஸ்வரர் கோயில் நிதி.

*247 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம், திருக்கண்மாலீஸ்வரர் கோயில் நிதியிலிருந்து கிருஷ்ணராயபுரத்தில் பயணியர் விடுதி ஒன்று கட்டப்படுவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதுவரை விடுதி கட்டப்படாமல் கால தாமதம் ஆவதற்கு உரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) திருக்கோயிலின் நிதி வசதி சரியின்மையால் அறங்காவலர் குழு இத் திட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிருஷ்ணராயபுரத்தில் ஊராட்சி ஒன்றியமும், வங்கி நிறுவனங்களும் இன்னும் ஏராளமான அலுவலகங்களும் இருக்கின்றன. அந்த இடத்தில் அதிகாரிகள் வந்தாலோ அல்லது வேறு யாராவது வந்தாலோ தங்குவதற்கு இடவசதி இல்லை. நான் அறநிலையத் துறை ஆணையரை கேட்டபோது நிச்சயம் செய்துதரப்படும் என்று சொன்னர். இப்போது இல்லை என்று சொல்வதற்கு பணம் இல்லையா அல்லது மனம் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மனம் இருக்கிறது பணம் இல்லை.